அலகு தேர்வு 4

மேல்நிலை இரண்டாம் ஆண்டு ----- கணக்குப்பதிவியல்

பாடம் - 4 . கூட்டாண்மை கணக்குகள்-- நற்பெயர்

காலம் : 75 நிமிடம் மதிப்பெண்கள் : 50

## பகுதி - I

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 10 × 1 = 10

சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக :

1. உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயான வேறுபாடாகும்
   அ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம்
   ஆ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள்
   இ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
   ஈ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம்

2. தவறான கூற்று எது?
   அ) நிறுவனத்தின் இலாபம் ஈட்டும் திறன், நற்பெயரின் மதிப்பினைத் தீர்மானிக்கிறது.
   ஆ) அதிக இலாபம் ஈட்டும் ஒரு நிறுவனம் அதிகமான நற்பெயர் மதிப்பினைக் கொண்டிருக்கும்.
   இ) போட்டியே இல்லாத அல்லது குறைவான போட்டியைக் கொண்டுள்ள நிறுவனத்தின் நற்பெயர் மதிப்பு குறைவானதாக இருக்கும்.
   ஈ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து ஆகும்.

3. ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹. 90,000; சொத்துகள் ₹. 50,000 மற்றும் பொறுப்புகள் ₹. 30,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு -----------
   அ) ₹. 40,000 ஆ) ₹. 70,000 இ) ₹. 1,00,000 ஈ) ₹. 30,000

4. 2017- ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹. 42,000 ; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 6,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ₹. 2,000 எனில், சரிக்கட்டப்பட்ட இலாபம்
   அ) ₹. 36,000 ஆ) ₹. 35,000 இ) ₹. 38,000 ஈ) ₹. 34,000

5. தவறானதை கண்டுபிடிக்கவும்.
   அ) சாதாரண இலாபம் = பயன்படுத்தப்பட்டமுதல் × சாதாரண இலாப விகிதம்
   ஆ) பயன்படுத்தப்பட்டமுதல் = நிலைச் சொத்துகள் + நடப்புச் சொத்துகள் - நடப்புப் பொறுப்புகள்
   இ) உயர் இலாபம் = சாதாரண இலாபம் - சராசரி இலாபம்
   ஈ) சாதாரண இலாபவிகிதம் = ஒரு தொழிலில் ஒரே தன்மையுடைய வியாபார நிறுவனங்கள்

6. சரியான கூற்று எது?
   அ) நற்பெயர் ஒரு கற்பனை சொத்து.
   ஆ) நற்பெயர், தொழில் நிறுவனத்தின் இலாபத் தன்மையைப் பொறுத்து திட்டவட்டமான மதிப்பைக் கொண்டுள்ளது.
   இ) நற்பெயரினை தொழில் நிறுவனத்திடமிருந்து பிரிக்க இயலும்.
   ஈ) நற்பெயர், அதிக இலாபம் ஈட்டுவதற்கு மட்டுமே உதவும். அதிக வாடிக்கையாளர்களைக் கவர்வதற்கு உதவாது



7. கூற்று ( A ) : ஒரு பழமையான மற்றும் சிறப்பாக உருவாக்கப்பட்டு நீண்டகாலமாக இயங்கி வரும் தொழில் நிறுவனம் பொதுமக்களிடையே புகழ் மற்றும் நன்மதிப்பினைப் பெறுகிறது.
   காரணம் (R) : நல்லதரமான பொருள் மற்றும் சேவை, தொழிலின் அமைவிடம் போன்றவையே அதற்கு காரணம் ஆகும்.

   கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.
   அ) A மற்றும் R இரண்டும் சரி ஆனால் R என்பது A க்கு சரியான விளக்கம் அல்ல.
   ஆ) A மற்றும் R இரண்டும் சரி . மேலும் R என்பது A க்கு சரியான விளக்கம்
   இ) A சரி ஆனால் R தவறு
   ஈ) A தவறு ஆனால் R சரி

8. சராசரி இலாபம் ₹. 40,000 மற்றும் சாதாரண இலாபம் ₹. 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்
   அ) ₹. 25,000 ஆ) ₹. 5,000 இ) ₹. 10,000 ஈ) ₹. 15,000

9. நற்பெயரானது, ரொக்கம் அல்லது பொருளைச் செலுத்தி பெறப்பட்டிருந்தால், அது --------- நற்பெயர் என்று அழைக்கப்படுகிறது.
   அ) வாங்கப்பட்ட ஆ) பெறப்பட்ட இ) தன்னுருவாக்க ஈ) ( அ ) மற்றும் ( ஆ )

10. இம்முறையானது, இலாபத்தின் போக்கு படிப்படியாக அதிகரித்துக் கொண்டு அல்லது குறைந்து கொண்டு போகும்போது பயன்படுத்தப்படுகிறது.
    அ) சாதாரண சராசரி இலாப முறை ஆ) கூட்டு சராசரி இலாப முறை
    இ) உயர் இலாபத்தில் கொள்முதல் முறை ஈ) ஆண்டுத்தொகை முறை

## பகுதி --- II

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும். அவற்றில் வினா எண் 17- க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 2 = 10

11. நற்பெயர் என்றால் என்ன?
12. சாதாரண இலாபவிகிதம் என்றால் என்ன?
13. கூட்டாண்மை நிறுவனத்தில் நற்பெயரை மதிப்பிடும் ஏதேனும் இரண்டு சூழ்நிலைகளைத் தரவும்.
14. பின்வரும் விவரங்களிலிருந்து சராசரி இலாபம் கணக்கிடவும்.
    2015 : ₹. 12,000 ; 2016 : ₹. 27,000; 2017 : ₹. 6,000
15. சராசரி இலாபம் ₹. 42,000 ஆக இருக்கும்போது 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
16. பின்வரும் தகவல்களிலிருந்து சாதாரண இலாபத்தின் மதிப்பைக் காணவும்.
    (அ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹. 10,000
    (ஆ) சாதாரண இலாபவிகிதம் 10%
17. கீழ்கண்ட விவரங்களைக் கொண்டு ஒரு நிறுவனம் ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிட்டது. அதில் 3 ஆண்டுகளில் 10% வட்டி விகிதத்தில் ₹. 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகையின் மதிப்பு விடுபட்டுள்ளது. அதை தாங்கள் கண்டுபிடிக்கவும்.
    நற்பெயர் ₹. 24,868 ; உயர் இலாபம் ₹. 10,000 ; ஆண்டு தொகை மதிப்பு ?



Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

## பகுதி --- III

எவையேனும் 5 வினாக்களுக்கு விடையளிக்கவும்.அவற்றில் வினா எண் 24 - க்கு கட்டாயம் விடையளிக்கவும். 5 × 3 = 15

18. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் 2 ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது.
மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 9,000 ; ₹. 4,000 ; ₹. 2,000. நற்பெயரின் மதிப்பைக் காண்க.

19. நிறுவனத்தின் நற்பெயர் கடந்த ஐந்து ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் மூன்று ஆண்டு கொள்முதல் என மதிப்பிடப்படுகிறது. ஐந்து ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 40,000, ₹. 32,000, ₹. 15,000, ₹. 13,000, ₹. 25,000, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடுக.

20. கடந்த நான்கு ஆண்டுகளின் சராசரி இலாபத்தின் 2 ஆண்டு கொள்முதல் என கொண்டு நற்பெயர் தொகையைக் கணக்கிடவும். நான்கு ஆண்டுகளின் இலாப நட்டங்கள் பின்வருமாறு

| | | |
|---|---|---|
| 2015 | இலாபம் | ₹. 20,000 |
| 2016 | இலாபம் | ₹. 30,000 |
| 2017 | நட்டம் | ₹. 6,000 |
| 2018 | இலாபம் | ₹. 16,000 |

21. பின்வரும் விவரங்களைக் கொண்டு உயர் இலாப மதிப்பினை காணவும்.
   i) மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹. 2,000, ₹. 5,000 மற்றும் ₹. 8,000.
   ii) பயன்படுத்தப்பட்டமுதல் ₹. 20,000
   iii) சாதாரண இலாபவிகிதம்: 10%

22. பின்வரும் தகவல்களிலிருந்து, மூலதனமாக்கல் முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   (அ) பயன்படுத்தப்பட்ட முதல் ₹. 1,50,000 (ஆ) சாதாரண இலாபவிகிதம் 10%
   (இ) சராசரி இலாபம் ₹. 20,000

23. பின்வரும் விவரங்களைக் கொண்டு, ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   i) சாதாரண இலாபம் ₹. 4,000
   ii) சாதாரண இலாபவிகிதம்: 10%
   iii) சராசரி இலாபம் ₹. 14,000
   iv) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹. 1 ன் தற்போதைய ஆண்டுத்தொகை மதிப்பு ₹. 3.352

24. உயர் இலாபம் ₹. 22,000; சாதாராண இலாப விகிதம் 10% எனில், நற்பெயரின் மதிப்பு யாது?

## பகுதி --- IV

ஏதேனும் மூன்று வினாக்களுக்கு விடையளிக்கவும். 3 × 5 = 15

25. கடந்த 4 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 3 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் கூட்டுசராசரி இலாபத்தினை பயன்படுத்தி, நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

| விவரம் | 2015 | 2016 | 2017 | 2018 |
|---|---|---|---|---|
| இலாபம் ( ₹ ) | 35,000 | 20,000 | 15,000 | 14,000 |
| நிறை | 1 | 2 | 3 | 4 |



26. பின்வரும் விவரங்களிலிருந்து, உயர் இலாபத்தில் 5 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   (அ) பயன்படுத்தப்பட்ட முதல் : ₹. 1,50,000
   (ஆ) சாதாரண இலாபவிகிதம் : 20%
   (இ) 5 ஆண்டுகளுக்குரிய நிகர இலாபம் :
   2014 : ₹. 20,000 ; 2015: ₹. 24,000; 2016: ₹. 50,000; 2017: ₹. 36,000 மற்றும் 2018: ₹. 60,000
   (ஈ) கூட்டாளிகளுக்கான உழைப்பூதியம் ஆண்டுக்கு ₹. 3,000.

27. பின்வரும் விவரங்களைக் கொண்டு ஆண்டுத்தொகை முறையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   i) பயன்படுத்தப்பட்டமுதல் ₹. 20,000
   ii) சாதாரண இலாபவிகிதம்: 10%
   iii) 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ₹.7,000, ₹.5,000 மற்றும் ₹.9,000.
   iv) 3 ஆண்டுகளில் 10% வட்டி வீதத்தில் ₹. 1 ன் தற்போதைய ஆண்டுத் தொகை மதிப்பு ₹. 3.5668.

28. கூட்டாண்மை அடிப்படையில் நடத்தப்படும் ஒரு வணிகத்தின் விவரங்கள் பின்வருமாறு:
   1) ஈட்டிய இலாபங்கள் : 2017: ₹. 60,000; 2018: ₹. 80,000 மற்றும் 2019: ₹. 65,000.
   2) 2017 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 15,000 சேர்ந்துள்ளது.
   3) சரக்கிருப்பு தீயினால் சேதமடைந்ததால் 2019 ஆம் ஆண்டின் இலாபத்தில் ₹. 5,000 குறைக்கப்பட்டது.
   4) சரக்கிருப்பு காப்பீடு செய்யப்படவில்லை. ஆனால், எதிர்காலத்தில் காப்பீடு செய்வதென முடிவு செய்யப்பட்டது. அதற்கான காப்பீட்டுக் கட்டணம் ஆண்டுக்கு ₹. 5,000 என மதிப்பிடப்பட்டது.

   3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 2 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.

29. தீபா வணிக நிறுவனத்தின் பின்வரும் விவரங்களிலிருந்து 3 ஆண்டுகள் சராசரி இலாபத்தில் 4 ஆண்டுகள் கொள்முதல் என்ற அடிப்படையில் நற்பெயரின் மதிப்பைக் கணக்கிடவும்.
   i) டிசம்பர் 31ஆம் நாளோடு முடிவடையும் ஆண்டுகளான 2016, 2017 மற்றும் 2018 ன் இலாபங்கள் முறையே ₹. 52,000, ₹. 48,000, மற்றும் ₹. 35,000.
   ii) 2016 ஆம் ஆண்டின் இலாபத்தில் திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹. 12,000 சேர்ந்துள்ளது.
   iii) 2017 ஆம் ஆண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ . 8,000 அதிகமாக மதிப்பிடப்பட்டது.



www.Padasalai.Net

Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com